

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்செட்டி முதல் நிலை ஊராட்சியில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூட கட்டடம் கட்டுவதற்கான பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட கழகச் செயலாளர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், மு.கதிரவன், வே.ஆனந்த் குமார், உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற முன்னாள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில் செஞ்சி பேரூராட்சி சத்திர தெருவில் உள்ள பெரிய மகூதிவளாகத்தில் சிறுபான்மை இஸ்லாமிய 1000 மகளிர் களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் மஜீத் பாபு, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

# ‘நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்’ விரைவில் தொடக்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, ஜூன்.5-

முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் “நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில், 2025-26 ஆம் ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கை அறிவிப்பு, நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்புமிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமினை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:-

இந்தியாவில் 3வது பொதுவான இறப்பிற்கு காரணமாக விளங்குகின்ற ஒரு பெரிய நோய், நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் என்பதாகும். COPD என்று சொல்லக்கூடிய Chronic obstructive pulmonary disease எனும் நோயினால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்டு வருகிறது. கோவிட் பாதிப்பிற்கு பிறகு இதயம் பாதிப்புகள் நுரையீரல் பாதிப்புகள் என்பது கூடுதலாகி வருகிறது. 3வது நோய் என்று சொல்லும்போது முதலில் இதய பாதிப்புகளுக்கான மரணங்கள், பக்கவாத பாதிப்புகளுக்கான மரணங்கள், தொடர்ந்து 3வது நோய் பாதிப்பு என்றால் நுரையீரல் அடைப்புக்கான மரணங்கள் என்று அதிக அளவில் மரணங்களை சந்திக்கின்ற நோயாக இருப்பது COPD ஆகும். இந்த நோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் மக்களிடையே போதுமான அளவிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், முதியவர்கள் நெடுங்காலம் புகை பிடிப்பவர்கள், நுரையீரல் தாக்கம் அதிகம் ஏற்படுபவர்கள் என்று கண்டறிந்து நுரையீரல் தாக்குவதற்குரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், பொதுமக்களுக்கு நீடித்த நாள்பட்ட நுரையீரல் தொற்றிற்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்ற நெடுங்காலம் புகைப் பிடிக்கும் பழக்கம், காற்று மாசு, தொழில் சார் நோய் பாதிப்புகள் போன்றவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவிருக்கிறது. எனவே இந்த திட்டத்தை இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கிறோம்.

### கொழுப்பு கல்லீரல் நோய்

அதேபோல் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த இன்னொரு சிறப்பான திட்டம் கொழுப்பு மிகு கல்லீரல் நோய். இதுவும் கூட அதிகம் உயிரிழப்புகளை தருகின்ற ஒரு நோயாகும். எனவே கொழுப்பு மிகு கல்லீரல் நோய் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி, ஆரம்ப நிலை பரிசோதனைகளை மேற்கொள்வது போன்ற பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த கால வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களினால் உலகெங்கும் சுமார் 30% மக்கள் கொழுப்பு மிகு ஈரல் நோய் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். இதை கருத்தில் கொண்டு களப்பணியாளர்கள் மூலம் நோய் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அறிகுறிகள் உள்ளவர்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனைகளுக்காக கல்லீரல் பாதிப்புக்கான இரத்த பரிசோதனைகளை மேற்கொள்ள வழிவகை செய்வது போன்ற பல்வேறு விஷயங்களை மேற்கொள்வது போன்ற திட்டங்கள் குறித்து பயிற்சி முகாம் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த பயிற்சியில் மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தை மக்களிடையே சென்று சேர்த்த மாவட்ட திட்ட அலுவலர்கள் அனைவருமே இங்கே பங்கேற்றிருக்கிறார்கள். மாவட்ட பயிற்சி மருத்துவ அலுவலர்கள் அனைவரும் பங்கேற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற சுகாதார மாவட்டங்கள் 45 இலிருந்து மாவட்ட சுகாதார அலுவலர்கள் காணொளி வாயிலாகவும் பங்கேற்று இருக்கிறார்கள். ஆக மிக முக்கியத்துவம் வாய்ந்த பயிற்சி பயிலரங்கத்தை இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

### நலம் காக்கும் ஸ்டாலின் - திட்டம்

இது மட்டுமல்லாமல் இந்த துறையில் இன்னொரு மகத்தான சாதனையாக முதலமைச்சர் அவர்கள் இன்னமும் நோயற்ற தமிழ்நாடு, நோய் பாதிப்புகள் அற்ற தமிழ்நாட்டு மக்கள் என்கின்ற வகையில் பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வர அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்தவகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் மனதிற்கு மிகவும் நெருக்கமான ஒரு சிறப்பான திட்டம் ஒன்று மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்படவிருக்கிறது. இந்த திட்டத்தின் பெயர் “நலம் காக்கும் ஸ்டாலின்“.

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியியல் மருத்துவம் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம் என்று பல்வேறு மருத்துவ முறைகள் இதில் ஒருங்கிணைய இருக்கின்றது.

Master Health Check up என்று சொல்லக்கூடிய முழு உடற் பரிசோதனை மக்களைத் தேடி, மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று பரிசோதனைகள் செய்யும் திட்டம் மிக விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் மாற்றுத்திறன் சதவிகிதம் கண்டறிந்து சான்றிதழ் தருகின்ற திட்டம் இந்த முகாம்களில் தரவிருக்கிறது. புற்றுநோய்க்கான பரிசோதனைகள் இந்த திட்டத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் இது வரை தமிழ்நாட்டில் 1 கோடியே 44 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்றாலும் இன்னமும் புதிதாக தனிக் குடும்பங்கள் அமைத்துக் கொண்டவர்களுக்கு விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு முகாம்கள் நடத்தப்பட்டு சேர்க்கப்பட்டு வருகிறது என்றாலும் நலன் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டத்தில் புதிய பயனாளர்களுக்கு காப்பீடு அட்டையும் வழங்கப்படவிருக்கிறது.

எனவே ஒருங்கிணைந்த சுகாதார முகாமாக இந்த முகாம் அமையவிருக்கிறது. நோய் பாதிப்புகள் கண்டறிதல், தொடர் சிகிச்சை செய்தல், வரையறுக்கப்பட்ட பரிசோதனைகள் செய்தல், நோயறிதல் மற்றும் பரிந்துரைக்கு முன்னுரிமை என்கின்ற வகையிலான இந்த மகத்தான திட்டம் மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இந்த முகாம் வருகின்ற டிசம்பர் இறுதிக்குள் 1256 இடங்களில் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் இருக்கின்ற வட்டாரங்களின் எண்ணிக்கை 388, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 வீதம் 1164 முகாம்களும், சென்னையில் 15 மண்டலங்களில் மண்டலத்திற்கு 1 என்கின்ற வகையில் 15 முகாம்களும், தமிழ்நாட்டில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகள் 5, இந்த 5 மாநகராட்சிகளில் தலா 4 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவான 19 மாநகராட்சிகளில் தலா 3 முகாம்களும், ஒட்டுமொத்தமாக 1256 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. செல்வ விநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, இணை இயக்குநர் (தொற்றா நோய்) மரு.கிருஷ்ணராஜ், திட்ட அலுவலர் (தொற்றா நோய்) மரு.பிரவின் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில் குமார் டிஎம்இ முன்னிலையில் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட கழக செயலாளர் க. கோவிந்தராஜ் ஏற்பாட்டில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கொடியேற்றி, இனிப்புகள் வழங்கினார். உடன் எஸ்.குமார், ஜி.உமாபதி, பி.சத்யநாராயணன், கே.சசி, ஏ.ரகு, ஜி.அருண்குமார், ஜி.சம்பத், எம்.மாசிலாமணி, எம்.சண்முகம், வி.வல்லவராஜ், எஸ்.மாரியப்பன், சந்தோஷ்முருகன், ஏ.சந்திரசேகர், ஹேமலதா, எச்.பழனிராஜ், ஏ.எழுமலை மற்றும் மாநில, மாவட்ட கழக, பகுதி கழக, நிர்வாகிகளும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும், பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும், கழகத் தோழர்களும், பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதல்வர் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் மக்களுக்கு நலம் தரக்கூடிய பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக வார்டு 4, எர்ணாவூர் பகுதியில் உள்ள பஜனை கோயில் தெரு, மேட்டு தெரு திருவீதி அம்மன் நகர், வி பி நகர் உள்ளிட்ட எர்ணாவூர் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மழைநீர் வடிகால்வாய் பணிகளை வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க கோரி சென்னை மாநகர மண்டலம் 1இன் மண்டல அலுவலர் ,மண்டல குழு தலைவர் மற்றும் அதிகாரிகளை சந்தித்து திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் மனு வழங்கினார்.

### செம்மொழி நாளாம் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா!

# திருவண்ணாமலை மாநகரம் முழுவதும் நலஉதவிகள்!

## கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் நலஉதவிகள் வழங்கினார்!

திருவண்ணாமலை, ஜூன் 5 -

திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்குதல், நலஉதவிகள் வழங்குதல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாக் களில் கலந்து கொண்டு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் நலஉதவி கள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

03.06.2025 செவ்வாய் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு, திருவண்ணா மலை, காந்தி சிலை அருகிலிருந்து திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு அறுசுவை உணவு மற்றும் நலஉதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் தலைமை வகித்தார்.

பகுதி கழக பொறுப்பாளர்கள் சு.விஜி(எ)விஜியராஜ், அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் கலந்து கொண்டு, காலை 9.30 மணிக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கு கம்பங்கூழ், கரும்பு சாறு, மோர் ஆகியவற்றை வழங்கினார். காலை 10.00மணிக்கு சின்ன கடைத் தெருவில் மாவட்ட பிரதிநிதி இல. குணசேகரன் ஏற்பாட்டில் 100 மகளிருக்கு சேலைகளும், 250பேருக்கு அறுசுவை உணவுகளும் வழங்கப்பட்டது.

காலை 10.15மணிக்கு, மாவட்ட பிரதிநிதி அ.கண்ணன், வட்ட செயலாளர் ம. வினோத்குமார் ஏற்பாட்டில் 250பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

காலை 11.00மணிக்கு, அண்ணா சிலை அருகில் 250 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 12.00மணிக்கு மின்கழக தொ.மு.ச., திட்ட செயலாளர் நா.சரவணன் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி பொட்டலங்களை டாக்டர் எ.வ. வே.கம்பன் வழங்கினார்.

பிற்பகல் 12.15மணிக்கு தொ.மு.ச., மாநில துணைத் தலைவர் க.சௌந்தரராசன் ஏற்பாட்டில், சிட்கோ அரசு பேருந்து பணிமனையில் 500 பேருக்கு அறுசுவை வழங்கினார்.

பிற்பகல் 12.30 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் தெருவில், வட்ட செயலாளர் செ. எழில்மாறன் ஏற்பாட்டில் 500பேருக்கு அறுசுவை உணவு பொட்டலங்கள் மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 12.45மணிக்கு, தியாகி அண்ணாமலை நகரில் மாவட்ட துணை அமைப்பாளர் கிரிக்கெட் க.ரவி ஏற்பாட்டில் மாணவர்களுக்கு வினாடி வினா நிகழ்ச்சினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பிற்பகல் 1.00மணிக்கு வழக்கறிஞர் மாவட்ட அமைப்பாளர் இரா.கார்த்திகேயன் ஏற்பாட்டில் கிரேஸ் மருத்துவமனை முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவினை வழங்கினார்.

பிற்பகல் 1.15மணிக்கு, காந்தி நகர் பைபாஸ் சாலையில் பகுதி பொறுப்பாளர் சி.எஸ்.சண்முகம் ஏற்பாட்டில் 500பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 1.30மணிக்கு, வேட்டவலம் சாலையில் வட்ட செயலாளர் கு.குமார் ஏற்பாட்டில், 250பேருக்கு பிரியாணி மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

பிற்பகல் 1.45மணிக்கு, தண்டராம்பட்டு ரோடு, தாமரை நகரில் பகுதி பொறுப்பாளர் பா.ஷெரீப் ஏற்பாட்டில் 100 மகளிர்களுக்கு சேலைகள், 250பேருக்கு பிரியாணி பொட்டலங்கள் வழங்கினார்.

பிற்பகல் 2.00 மணிக்கு, மாரியம்மன் கோயில் தெருவில் பகுதி பொறுப்பாளர் குட்டி க.புகழேந்தி ஏற்பாட்டில் 100மகளிருக்கு சேலைகளும், 500பேருக்கு அறுசுவை உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

பிற்பகல் 2.15 மணிக்கு, தேனிமலை, அரசு பேருந்து பணிமனையில் க.சௌந்தரராசன் ஏற்பாட்டில் 250பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

பிற்பகல் 2.30மணிக்கு கணந்தம்பூண்டி டாஸ்மாக் அலுவலகம் அருகில், மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ஆறுமுகம் ஏற்பாட்டில் 500பேருக்கு சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பின்னர் பின்னர் மாலை 6.00மணிக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி பொட்டலங்களை வழங்கினார்.

மாலை 7.00மணிக்கு பச்சையம்மன் கோயில் அருகில், பகுதி கழக பொறுப்பாளர் அ.கோவிந்தன் ஏற்பாட்டில் கலைஞர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் 500மகளிருக்கு சேலைகளும், 250 நபருக்கு அறுசுவை உணவுகளையும் வழங்கினார்.

அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் அனைத்து ஆட்டோ நிறுத்தங்களிலும் கலைஞர் பிறந்த நாள் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜய ரங்கன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு. ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், துணை மேயர் சு.ராஜாங்கம்,

வழக்கறிஞர்கள் டி.எம்.கதிரவன், அ.அருள்குமரன், எஸ். கண்ணதாசன், என்.முரளி, நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், இல.குணசேகரன், அ.கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெட்ராஸ் கே.சுப்பிரமணி, உதயாரவி, காயத்திரி கிருஷ்ணகுமார், பி.ஆர்.நாகராஜ், கா. கோபிசங்கர், கலைவாணி சுரேஷ், வட்ட செயலாளர்கள் செ.எழில்மாறன், அ.கஜபதி, எஸ்.கே.டி.வீரா, அ.வடிவேல், கோல்டு.மஞ்சு, ப.கண்ணன், அ.ஆறுமுகம், ஆ.அருண்குமார், சென்னை.சுரேஷ், கு. தியாகு, நகர அமைப்பாளர்கள் மண்டி. ஆ.பிரகாஷ், எம். குணாளன், நகர துணை அமைப்பாளர்கள் சச்சின்.சபரி, கீழ்நாத்தூர் ராஜேந்திரன், மூ. சூரியபிரகாஷ், சா.ரகுநாதன், சு.சந்தோஷ், எம்.எஸ்.டி.மணிகண்டன், ஆ.சீனுவாசன், க. திலீப் குமார், மூ.ராஜேஷ் கண்ணா, சி.ரகுபதி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை சார்ந்த ஜி.நடராஜன், கே.சண்முகம், ஆர்.ரங்கநாதன், ஆர்.மலைவாசன், ஜி.சம்பத், மின்னல்.பாபு, எஸ்.ரவி, வி.மகாவிஷ்ணு, ஆர்.மனோகரன், எல்.இலட்சுமணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை சைதாப்பேட்டை ஜாபர்கான்பேட்டையில் மாவட்ட பிரதிநிதி ஜி.கே.ராமச்சந்திரன் தலைமையில் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் முன்னிட்டு தி.மு.க. வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் அசைவ உணவு வழங்கினார். இதில் பகுதி கழகச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை மாவட்டம் வர்த்தக அணி, துணை அமைப்பாளர் சிற்றரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் ஐயா கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் வை.ம.அருள்தாசன் தலைமையில் திருவொற்றியூர் விம்கோ நகரில் உள்ள ரெகோபாத் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லத்தில் உள்ள ஆதரவற்றோருக்கு அசைவ மட்டன் உணவு வழங்கப்பட்டது இதில் யு.எஸ்.குறளரசன், வி.கே. ஏழுமலை, ஆர். நவக்குமார், எஸ்.இளங்கோ, என்.ராம்குமார், பழக்கடை ஆர்.வேலாயுதம் எஸ்.வி.முருகன் கே.எஸ்.கோபி அம்மையப்பர் சேவை மையத்தின் ஏ.சி.எல் சீனிவாசன் எஸ். செல்லதுரை எம்.ராஜா எஸ்.மகேஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், செம்மொழி நாளை முன்னிட்டு பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, 15வது வட்டம் நாபாளையம் சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 15 வது வட்ட செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் நிர்வாகிகள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் பி.டி. ரவிச்சந்திரன், முகமது வசீம், செல்வன், எஸ். கோபாலகிருஷ்ணன், பக்தவச்சலம், கண்ணன், பாலாஜி, எல்லமுத்து,ஏ. விஜயன், புஷ்பராஜ், தசரதன்,சபரீசன், ரமேஷ், குணசேகரன், நேசரவி, டென்னிஸ், வக்கீல் டில்லி, விஜயகுமார், பாலன், சாரங்கபாணி, ஏசுராஜ் ,எல்லமுத்து, சுந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.